தொழிலாளர் நீதிமன்றம். காஞ்சிபுரம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **ID.No.** | : | **35/2021** | சாட்சியம் | : | **WW1** |
| **Name** | : | திரு. நடராஜன் | | | |
| **Date** | : | **23.10.2024** | | | |
| **Time** | : | **12.40 p.m to 1.59 p.m** | | | |

தொ.த.சா.1 திரு. நடராஜன் என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். குறுக்கு விசாரணை

நான் 01.10.2016 அன்று பயிற்றுநராக சேர்ந்தேன். பயிற்சி காலம் 24 மாதங்கள் என்றால் ஆமாம். ID.14/2021 இல் மனுதாரர் திவாகரன் எப்போது பயிற்சிக்கு சேர்ந்தார் என்றால் சாட்சி பதிலளிக்கவில்லை. மற்ற வழக்குகளில் உள்ள மனுதாரர்கள் எப்போது பயிற்சிக்கு சேர்ந்தார்கள் என்றால் ஒவ்வொருவரும் ஒவ்வொரு தேதியில் சேர்ந்தார்கள் தேதி எனக்கு தெரியாது. 24 மாத பயிற்சி காலத்தில் எங்களுக்கு பயிற்சி எதுவும் வழங்கப்படவில்லை நாங்கள் நிரந்தர தொழிலாளர்களாக தான் வேலை செய்தோம் என சொல்லி தொழிற் தாவா தாக்கல் செய்யப்பட்டதா என்றால் இல்லை. பயிற்சி காலம் முடிந்த பின்னர் 01.10.2018 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவு முன்னிலைக்கு தகுதி காண் பருவத்தினராக இருந்தோம் என்றால் ஆமாம். ID.14/2021 மனுதாரர் திவாகரும் 01.10.2018 உத்தரவு முன்னிலைக்கு தகுதிகாண் பருவத்தினராக நியமிக்கப்பட்டார் என்றால் ஆமாம். ID.17/2021 மனுதாரர் அருள் 01.09.2018 உத்தரவு முன்னிலைக்கு தகுதிகாண் பருவத்தினராக நியமிக்கப்பட்டார் என்றால் ஆமாம். ID.18/2021 மனுதாரர் நிவாஸ் 01.11.2018 உத்தரவு முன்னிலைக்கு

தகுதிகாண் பருவத்தினராக நியமிக்கப்பட்டார் என்றால் ஆமாம். ID.23/2021 மனுதாரர் பச்சையப்பன் 01.10.2018 உத்தரவு முன்னிலைக்கு தகுதிகாண் பருவத்தினராக நியமிக்கப்பட்டார் என்றால் ஆமாம். ID.29/2021 மனுதாரர் விக்னேஷ் 14.08.2018 உத்தரவு முன்னிலைக்கு தகுதிகாண் பருவத்தினராக நியமிக்கப்பட்டார் என்றால் ஆமாம். ID.15/2021 மனுதாரர் அஜித் 01.11.2018 உத்தரவு முன்னிலைக்கு தகுதிகாண் பருவத்தினராக நியமிக்கப்பட்டார் என்றால் ஆமாம். ID.36/2021 மனுதாரர் இமயவரம்பன் 01.10.2018 உத்தரவு முன்னிலைக்கு தகுதிகாண் பருவத்தினராக நியமிக்கப்பட்டார் என்றால் ஆமாம். மற்ற தொழிலாளர்களின் தகுதிகாண் பருவத்திற்கான உத்தரவை தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். 01.04.2019 தேதியிட்ட உத்தரவு முன்னிலைக்கு என்னுடைய, மற்றும் திவாகர், பாண்டியன், பச்சையப்பன், இமயவரம்பன் ஆகியோருக்கு தகுதிகாண் பருவம் மேலும் 6 மாதங்களுக்கு நீட்டிக்கப்பட்டது என்றால் ஆமாம். அதுபோன்று 02.05.2019 தேதியிட்ட உத்தரவு முன்னிலைக்கு நிவாஸ்க்கு 3 மாதம் தகுதிகாண் பருவம் நீடிக்கப்பட்டது என்றால் ஆமாம். 14.02.2019 தேதியிட்ட உத்தரவு முன்னிலைக்கு விக்னேஷ்ற்கு இருக்கு 6 மாதம் தகுதிகாண் பருவம் நீடிக்கப்பட்டது என்றால் ஆமாம். மனுதாரர்களின் தகுதிக்காண் பருவத்தில் அவர்களின் செயல்திறன் திருப்தியாக இல்லாத காரணத்தினால் மேலும் நீட்டிக்கப்படுவதாக சொல்லி உத்தரவு வழங்கப்பட்டது என்றால் இல்லை. எங்களுக்கு வழங்கப்பட்ட தகுதிக்காண் பருவ நீட்டிப்பு உத்தரவில் எங்களுடைய செயல்திறன் திருப்தியாக இல்லாத காரணத்தினால் மறு ஆய்வு செய்து மேலும் தகுதிகாண் பருவம் நீட்டிக்கப்படுவதாக கண்டுள்ளதா என்றால் ஆமாம். ஆனால் அவர்கள் எங்களிடம் ஒரே சமயத்தில் எல்லா

தொழிலாளர்களையும் நிரந்தரம் செய்ய இயலாது படிப்படியாக தான் செய்ய இயலும் என சொல்லி அந்த உத்தரவை வழங்கினார்கள். மேற்படி விவரம் எங்களுக்கு வழங்கப்பட்டுள்ள உத்தரவில் கண்டுள்ளதா என்றால் இல்லை. மனுவிலும் சாட்சியத்திலும் மேற்படி விவரம் சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. தகுதி காண் பருவம் நீட்டிக்கப்பட்டது சம்பந்தமாக வழக்கு எதுவும் போடப்பட்டதா என்றால் இந்த வழக்கு தான் தாக்கல் செய்துள்ளோம். தகுதி காண் பருவத்தில் எங்களுடைய செயல் திறன் திருப்திகரமாக இல்லை என நிர்வாகம் தெரிவித்ததற்கு ஆட்சேபித்து அவர்களுக்கு கடிதம் எதுவும் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. வாய்மொழியாக தான் சொன்னோம். தகுதிகாண் பருவம் நீட்டிக்கப்பட்ட காலத்தில் எங்களுடைய செயல்திறன் திருப்திகரமாக இல்லாத போது பணிக்காலம் முடிவுக்கு கொண்டு வரப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்தது என்றால் தகுதி காண் பருவம் முடிவதற்கு முன்பாகவே எங்களை நீக்கம் செய்து விட்டார்கள். நாங்கள் சார்ந்திருக்கும் தொழிற்சங்கம் சார்பாக நிரந்தர தொழிலாளர்கள் முன்வைத்த பொது கோரிக்கை முன்னிலைக்கு சென்னை தொழிற் தீர்ப்பாயத்தில் தொழிற்தாவா எழுப்பப்பட்டதா என்றால் தெரியாது. நாங்கள் சார்ந்திருக்கும் தொழிற்சங்கம் ஆகஸ்ட் 2019 ல் தொடங்கப்பட்டது அப்போதே அதில் சேர்ந்து விட்டோம். தொ.சா.ஆ.6 ல் தகுதி காண் பருவத்தினர் தொடர்பான பொது கோரிக்கை இல்லை என்றால் தெரியவில்லை. தொ.சா.ஆ.6 முன்னிலைக்கு பொது கோரிக்கை எந்த காரணத்திற்காக வைக்கப்பட்டது என்றால் எங்களுக்கு வழங்கப்பட்ட குறைவான ஊதியம் சம்பந்தமாக தொழிற்சங்கத்திற்கு தெரிவிக்கப்பட்டது அது சம்பந்தமாக வைக்கப்பட்டது. தொழிற்சங்கத்தில் எப்போது உறுப்பினராக சேர்ந்தேன் என காட்ட

ஆவணம் தாக்கல் செய்யவில்லை. 27.08.2019 அன்று அனைத்து மனுதாரர்களையும் நீக்கம் செய்தார்கள். மனுதாரர்கள் அனைவரும் தகுதி காண் பருவத்தில் எத்தனை நாட்கள் வேலை செய்தார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பிரிவில் வேறு வேறு தேதியில் சேர்ந்தார்கள் ஆனால் அனைவரும் இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக வேலை செய்தார்கள். ID.18/2021 மனுதாரர் நிவாஸ் தகுதிகாண் பருவத்தில் மொத்தம் 235 நாட்கள் மட்டுமே வேலை செய்தார் என்றால் தெரியாது. மனுதாரர் இமயவரம்பன் தகுதிகாண் பருவத்தில் மொத்தம் 239 நாட்கள் மட்டுமே வேலை செய்தார் என்றால் தெரியாது. தகுதி காண் பருவத்தில் எங்களுடைய செயல்திறன் ஆய்வு செய்யப்படவில்லை என்ற சொல்லி கடிதம் எதுவும் நிர்வாகத்திற்கு கொடுக்கவில்லை. 21.08.2019 அன்று வேலை நிறுத்தம் செய்ததாக சொல்லி இருக்கும்பொழுது அன்றைய தினம் நான் வேலைக்கு வந்தேனா என்றால் மேற்படி தேதியில் வேலை நிறுத்தமே செய்யவில்லை அது தவறான தேதி ஆகும். 26.08.2019 அன்றுதான் வேலை நிறுத்தம் தொடங்கியது. 26.08.2019 க்கு பின்னர் நான் வேலைக்கு வரவில்லை என்றால் ஆமாம். 27.08.2019 தேதியிட்ட தொ.சா.ஆ.7 ஆவணத்தில் செயல்திறன் திருப்தியாக இல்லாத காரணத்தினால் பணிநீக்கம் செய்யப்படுவதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம் ஆனால் தகுதிக்காண் பருவம் முடிவதற்கு முன்னரே நீக்கி விட்டார்கள். தொ.சா.ஆ.3 தகுதி காண் நியமன உத்தரவில் நிர்வாகம் எப்போது வேண்டுமானாலும் ஒரு மாத அறிவிப்பு அல்லது ஒரு மாத சம்பளம் கொடுத்து முடிவுக்கு கொண்டு வரலாம் என கண்டுள்ளது என்றால் ஆங்கிலத்தில் உள்ளதால் தெரியாது. பணி நீக்க உத்தரவிற்கு பின்னர் நான் எங்கும் வேலைக்கு செல்லவில்லை. PF எண் UAN

No.100946854276 என்பது என்னுடைய PF நம்பர் என்றால் பி.எப் நம்பர் உள்ளது ஆனால் எண் நினைவில்லை. என்னுடைய PF ஆவண முன்னிலைக்கு 12.04.2021 முதல் 11.12.2023 நான் டி.வி.எஸ் சப்ளை செயின் சொல்யூஷன்ஸ் லிமிடெட் வேலை பார்த்து உள்ளேன் என்றால் ஆமாம். வருமானம் எதுவும் இல்லாத காரணத்தினாலும் குடும்ப சூழ்நிலை காரணத்தினாலும் தற்காலிகமாக அங்கு வேலை பார்த்தேன் அது நிரந்தர வேலை இல்லை. மேற்படி நிறுவனத்தில் ஒப்பந்த தொழிலாளியாக ட்ராலி போன்ற வண்டி ஓட்டி வந்தேன். 11 ஆயிரத்திலிருந்து 12 ஆயிரம் மாத சம்பளமாக பெற்று வந்தேன். பிரமாண வாக்குமூல சாட்சியத்தில் எங்கும் வேலை செய்யவில்லை என தவறாக சொல்லி உள்ளேன் என்றால் வழக்கு போடுவதற்கு முன்னர் நான் எங்கும் வேலை செய்யவில்லை. ID.15/2021 மனுதாரர் அஜித் அவரின் PF எண் UAN No.100949766400 என்றால் தெரியாது. அவர் வேலை நீக்கத்திற்கு பின்னர் வேலைக்கு போனாரா என்றால் எனக்கு தெரிந்தவரையில் மனுதாரர்கள் யாரும் வேலைநீக்கத்திற்கு பின்னர் வேலைக்கு எதுவும் போகவில்லை. மனுதாரர் அஜித் 02.12.2020 to 31.12.2020 சபரி என்டர்ப்ரைசஸ் என்ற நிறுவனத்திலும் 05.01.2023 முதல் ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்தில் வேலை செய்கிறார் என்றால் தெரியாது. மனுதாரர்கள் அனைவரும் வேலைநீக்கத்திற்கு பின்னர் பயனுள்ள வேலையில் இருக்கிறார்கள் என்றால் தெரியாது. தகுதிகாண் பருவ நியமன உத்தரவு முன்னிலைக்கு தான் எங்களுக்கு பணி முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது என்றாலும் அதனால் நாங்கள் தாக்கல் செய்துள்ள தொழிற்தாவா நிலைக்கத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல. மனுதாரர்கள் அனைவருக்கும் அவர்களின் தகுதி காண் பருவத்திலும் தகுதிக்காண் நீட்டிப்பு

காலத்திலும் செயல்திறன் ஆய்வு செய்யப்பட்டு அதன் அடிப்படையில் தான் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

Typed to my dictation, read over to interpreted to the witness and acknowledged by him to be correct.

Sd/-S.Sujatha,
Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:23.10.2024